***24 மே 2019, கொழும்பு,*** இலங்கை- 23 மே 2019 அன்று சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கலகொட ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பு குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது ஆழ்ந்த அதிர்ச்சியினையும் கவலையினையும் தெரிவித்துள்ளது. இப்பொது மன்னிப்பானது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அழுத்தமான கேள்விகளை எழுப்பியுள்ளதுடன் ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் இக்கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர்.

08 ஆகஸ்ட் 2018 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான நான்கு குற்றச்சாட்டுக்களின்பேரில் ஆறு ஆண்டுகளில் அனுபவித்து முடிக்கப்பட வேண்டிய 19 ஆண்டுகளுக்கான கடூழிய சிறைத்தண்டனையை ஞானசார தேரருக்கு எதிராக விதித்திருந்தது. இத்தண்டனை மற்றும் தீர்ப்பு என்பன நீதிமன்ற வளாகத்திற்குள் தேரர் நடந்துகொண்ட நடத்தை முறையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டிருந்ததுடன் தேரருடைய நடத்தை நீதிமன்றத்தில் சாதாரண பிரஜைகள் நடந்துகொள்ள வேண்டிய மரியாதையான நடத்தைக்கு அப்பால் அமைந்திருந்தது என நியாயந்தீர்க்கப்பட்டிருந்தது.

'ஜனாதிபதி பொது மன்னிப்பு' என்பது நீதியின் தவறுகளை சரி செய்வதற்கானதாகும் என்பதால் அது தீவிர கவனத்துடனும் சிரத்தையுடனும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஞானசார தேரரை விடுவித்தமை தொடர்பில் பார்க்கின்றபோது, அவ்வதிகாரம் சிறிதளவேனும் தகுந்த அல்லது பொருத்தமான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ளதென கூற இயலாது. தேரரின் விளக்கம், தீர்ப்பு மற்றும் தண்டனை என்பன எவ்வகையிலும் சட்டம் தொடர்பான நெறிமுறையானதொரு வினாவை எழுப்பவில்லை. அத்துடன் தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீடு செய்வதனூடாக நீதியான மற்றும் விளக்கத்திற்கான அவரது உரிமையினை அனுபவிப்பதற்கான அதிகமான வாய்ப்புக்கள் தேரருக்கு காணப்பட்டன. உண்மையில், தேரர் மேன்முறையீட்டிற்கான உரிமையினை மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களிலும் பிரயோகப்படுத்தி இருந்தாரென்பதுடன் இவ்விரண்டு நீதிமன்றங்களும் அம்மேன்முறையீட்டினை தள்ளுபடி செய்திருந்தது. ஆகவே, இம்மன்னிப்பானது சட்டச் செயன்முறையில் இடம்பெறுகின்ற முறையற்ற தலையீடாக அமைகின்றது.

இப்போது மன்னிப்பானது பல கேள்விகளை எழுப்புகின்றது. முதலாவதாக, ஒருவர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டு, நெறிமுறைத்தன்மையுடைய நீதிச்செயன்முறையினூடாகத் தண்டிக்கப்பட்டு அதன்பின்னர் அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற பொது மன்னிப்பின் அடிப்படையில் தண்டனையிலிருந்து விடுபடுதல் சாத்தியமானது என்ற விடயத்தினை நெறிமுறைப்படுத்துகின்றது. மேலும், இம்மன்னிப்பு சட்டத்தை மதித்து நடக்கின்ற விடயம் தொடர்பில் பௌத்த பிக்குகள் போன்ற சில வகையான பிரஜைகள் சலுகைகளை அனுபவிப்பதனை எதிர்பார்க்க முடியுமென்ற செய்தியினை வெளிப்படுத்துகின்றது. முறையாக, விளக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு, தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்பட்ட நபர்கள் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் தனித்த தீர்மானத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படலாம் என்ற ஆபத்துமிக்க ஒரு முன்னுதாரனத்தினையும் இம்மன்னிப்பு வழங்குகின்றது.

இரண்டாவதாக, இம்மன்னிப்பு நாட்டில் பதட்டமான ஒரு சூழ்நிலை நிலவுகின்ற இந்த நெருக்கடியான காலகட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் வடமேல் மாகாணத்தில் பௌத்த மதத்தைச் சேர்ந்த குழுவினரால் முஸ்லிம்களுக்கு எதிரான கலகங்கள் முன்னெடுக்கப்பட்டு வெறுமனே ஒரு வார காலப்பகுதி மாத்திரமே நிறைவடைந்துள்ளதுடன் இக்கலகங்களினால் முஸ்லிம் நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன் முஸ்லிம்களுக்கு சொந்தமான பல வதிவிடங்கள், வியாபாரங்கள் மற்றும் வணக்கஸ்தலங்கள் என்பனவும் சேதமடைந்தன. சிறுபான்மையினருக் எதிரான, குறிப்பாக இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரங்களை மேற்கொள்வதிலும் வன்முறையைத் தூண்டுவதிலும் பொது பல சேனாவின் செயலாளர் என்ற வகையில் ஞானசார தேரர் முக்கிய பங்களித்திருந்தார். எவ்வாறெனினும், இம்மன்னிப்பு முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வின் மறைமுகமான ஒப்புதலாகவே கருதப்படுகின்றது என்பதுடன் இது இன்று இலங்கை முஸ்லிம்கள் அனுபவிக்கின்ற கவலை மற்றும் பயத்தினை அதிகரிப்பதாகவே அமையும்.

சட்ட ஆட்சியில் தலையீடு செய்தமைக்கான மற்றும் இம்முறையில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்விற்கு ஒப்புகையளித்தமைக்கான பொறுப்பு, தனித்து ஜனாதிபதியை மாத்திரம் சார்ந்தது அல்ல, மாறாக அது முழு அரசாங்கத்தினையும் சார்ந்த பொறுப்பாகும். இதற்கு முன்பு பௌத்த சாசன அமைச்சர் சாசன காமினி ஜயவிக்கிரம மன்னிப்பினை வழங்குவதற்கான மதத் தலைவர்கள் மற்றும் மூன்றாந்தரப்பு அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தார். அத்துடன் அரசாங்கத்தின் பல உறுப்பினர்கள் இது தொடர்பாகப் பேசியிருந்ததுடன் அதற்கு ஆதரவாக செயற்பட்டுமிருந்தனர். அதற்கமைய, முழு அரசாங்கமும் இம்மன்னிப்பினை வழங்கியமை எவ்வகையில் இலங்கையில் அரசியலமைப்பிற்கு, சட்டவாட்சிக்கு மற்றும் நீதி பரிபாலனத்திற்கு முரணானதாக அமையவில்லை என்பதனையும், அது எவ்வாறு சமுதாயங்களுக்கிடையிலான வன்முறையைத் தோற்றுவிக்காது என்பதனையும் குறிப்பிட்ட காரணங்களுடன் நியாயப்படுத்துதல் வேண்டும். எவ்வகையிலேனும் இதனை செய்ய தவறுதல் இலங்கையின் ஜனநாயகத்தின் நெறிமுறைத்தன்மையினை மழுங்கடிக்கும்.